# சியோனிசம் சமாதானத்திற்கு மிகப்பெரிய தடையாக உள்ளது

கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்னா

வரலாற்றில் என்றுமில்லாத அளவில் இன்றை இஸ்ரேலியா ஆட்சியாளர்கள் சர்வதேச சட்டங்களையும், அடிப்படை மனித உரிமைகளையும் உதாசீனம் செய்து வருகின்றனர்.

நிவாரண பொருட்களை பலஸ்தீன மக்களுக்காக சுமத்து வந்த சுதந்திர படகுகள் அணியை சர்வதேச எல்லையில் வைத்து இஸ்ரேல் தாங்கியுள்ளது. இதன் மூலம் பலஸ்தீன மக்கள் மீது புதிய வடிவிலான ஒடுக்குதலை இஸ்ரேல் தொடங்கியுள்ளது.

இதற்கு எதிராக உலகரீதியில் உள்ள பலஸ்தீன ஒத்துழைப்பு அமைப்புகளும், வெகுஜன அமைப்புக்களும் தமது கண்டனங்களை தெரிவித்துள்ளன.

உலக ரீதியில் பல எதிர்ப்பு நடவடிக்கைகள் இஸ்ரேலுக்கு எதிராக உருவாகியுள்ள நிலையில் கொழும்பிலும் இஸ்ரவேலுக்கு எதிராக மாறியல் போராட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

இதற்கு எதிராக உலகநாடுகள் கண்டன குரல்களை வெளியிடும் என்றும், மேலும் சில நாடுகள் தூதுவர்களை அழைத்து தமது எதிர்ப்பை தெரிவிக்கும் என்பன போன்றவை இஸ்ரவேல் அரசாங்கத்திற்கு தெரிந்தே இருக்கும். இது வழமையாக நடைபெறும் வழமையாகும்.

ஆனால் இம்முறை நிலைமை வேறுபட்டுள்ளது. இம்முறை உருவாகியுள்ள எதிர்ப்பலைகள் அரசாங்கங்களை வார்த்தைகளில் அல்ல செயற்பாடுகளில் இறங்க வைக்கும் அளவுக்கு நிலமை மாறியுள்ளது. இதேநேரம் இஸ்ரேலுக்கு எதிராக பல நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு உள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமா, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பாங்கிமூன், விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என குரல்கொடுத்துள்ளார்.

ஆனால் விசாரணைகளின் பின்னர் என்ன நடைபெறும்? இஸ்ரேல் இன்றுவரை ஒப்புக்கொள்ளவில்லை தான் சர்வதேச கடற்பரப்பில் பிழையான ஒரு தாக்குதலை நடத்தியதாக இதேநேரம் இஸ்ரேலிய இராணுவம் பத்து நடவடிக்கையாளர்கள் கொல்லப்பட்டுள்ளதாக கூறியுள்ளது. மேலும் இந்த பாதகச் செயலை புரிவதற்கு நான்கு இஸ்ரேலியர்கள் காயப்பட்டுள்ளதாக இஸ்ரேலியப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஆனால் அல்சீரா செய்தியாளர் இது தொடர்பாக தகவல் தெரிவிக்கையில் இஸ்ரேலிய இராணுவம் எத்தகைய எச்சரிக்கையையும் செய்யாது வெள்ளை கொடியுடன் வந்த சுதந்திர படகுகள் குழுவை குண்டு மழை பொழிந்து தாக்கியுள்ளன என தெரிவித்துள்ளார். மேலும் இத்தாக்குதலுக்கு 2008, 2009ல் கூறியது போன்று உள்ளிருந்த எதிர்பார்ப்பு என்று காரணம் கூற முடியாது. சுதந்திர படகுகள் குழுவின் மீதான தாக்குதலுக்கு முக்கிய காரணம், இவர்கள் காசா பகுதி மீது இஸ்ரேல் மேற்கொண்டுள்ள முற்றுகையைக்கு எதிராக செயற்படுவதே ஆகும். இந்த முற்றுகையை இஸ்ரேலிய அரசாங்கம் பாதுகாப்பு என்றே கூறும். இது பொதுமக்கள் மீது புரியப்படும் வெளிப்படையான குற்றமாகம். ஆனால் உலகில் உள்ள எந்தநாடும் இதற்கு எதிராக விரலை நீட்டவில்லை பலஸ்தீனமக்கள் மீது இஸ்ரேல் மேற்கொள்ளும் முற்றுகையினால் ஏற்படும் பஞ்சத்தை தவித்தே வருகின்றனர். இதன் மூலம் ஏற்படக்கூடிய அழிவை தடுத்து வருகின்றனர்.

இன்று காசா பகுதியில் போசாக்கின்மை காரணமாக ஆயிரக்கணக்கான குழந்தை பாதிப்புக்குள்ளாகி இருப்பதோடு, இப்பகுதியில் வாழ்பவர்களில் 80 விகிதத்தினர் வேலையற்றும் உள்ளனர். இங்கே வாழும் 15 லட்சம் மக்கள் நிவாரணத்தை நம்பிவாழும் நிலை உள்ளது. 2008,2009 காலப்பகுதியில் இஸ்ரவேல் மேற்கொண்ட அழிப்பு நடவடிக்கை காரணமாக இந்த மக்கள் எதுவித உதவியும் இன்றி இடிபாடுகளுக்குள் வாழ்கின்றனர் இவற்றை திருத்தியமைப்பதற்கான எத்தகைய முயற்சிகளுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலியரின் தாக்குதலுக்கு எதிராக கொழும்பில் நடத்தப்பட்ட மறியல் போராட்டம் உண்மையானதாகும். இத்தகைய போராட்டங்கள் கொழும்புக்கு வெளியேயும் வரும் வாரங்களில் தொடரலாம். இத்தகைய எதிர்ப்புகள் மகிந்த அரசாங்கம், இஸ்ரேலிய அரசை வெளிப்படையாக கண்டிக்கும் நிலையை உருவாக்கும். இது நிச்சயம் இஸ்ரேலுக்கம், இலங்கைக்கும் இருக்கும் இரகசிய உறவாடலை தடுக்கும். இஸ்ரேலிய இந்த புதிய ஒடுக்குமுறைகள் போலியான சமாதானத்தின் வெற்றுத்தனத்தை வெளிப்படுத்துகிறது. இத்தகைய செயற்பாட்டின் மூலம் 1967ல் பலஸ்தீனத்துக்கான சிறிய அரசு ஒன்று உருவாக்கப்பட்டது.

சியோனிசத்தின் மறு வடிவமாக இங்கே சிங்கள மேலாதிக்கம் காணப்படுகிறது. இதுவே இன்று சமாதான முயற்சிகளுக்கு தடையை ஏற்படுத்தும் சக்தியாக காணப்படுகிறது. சமாதானத்தை நிலைநாட்ட ஒத்துழைப்பு வழங்க முன்வரும் அமைப்புக்கள் மோசடியான இந்த நிலைமையை வெளிப்படுத்தி சமாதானத்துக்கான மாற்று ஒழுங்கை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் சமாதானம் எட்டப்படவேண்டும் இங்கே தீர்வு ஏற்படவேண்டும். என்றால் அது சமத்துவம், சுயாட்சி, சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இங்கே பலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமை நிபந்தனை அற்ற முறையில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் இதனுடன் 1948ல் அகதிகளாக சென்ற அனைத்து பலஸ்தீன மக்களும் தமது தாயத்திற்கு வர அனுமதிக்க வேண்டும் சியோனிச அரசின் ஆயுதங்கள் களையப்படுவதுடன், அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும். இதன் மூலமே பலஸ்தீன மக்களும் இஸ்ரேல் மக்களும் ஒன்றாக சமாதானமாக வாழமுடியும்.

# கொழும்பின் வெற்றிவிழா எதை பிரதிபலிக்கிறது

அப்துல்லீ காகீர

வன்னி வெற்றி நிகழ்வு மீண்டும் கோலாகலமாக நடந்தேறியுள்ளது. மே 18ம் தேதி பெரும் எடுப்பில் நடத்த இருந்த இவ் விழாவை இயற்கை அனுமதிக்காததால் ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் நடத்தப்பட்டது. யுத்தம் ஏற்படுவதற்கு காரணியாக இருந்த தேசிய இனப்பிரச்சனைக்கு எத்தகைய தீர்வையும் முன்வைக்காத நிலையில் மகிந்த அரசாங்கம் பேரினவாதத்தை குளிர வைப்பதற்காகா இவ்விழாவை நடத்தி முடித்துள்ளது குடும்ப அரசியலை மேற்கொண்டுவர நினைக்கும் மகிந்த அரசு இதில் இருந்து மக்களை திசை திருப்ப போர் வெற்றி பூச்சாண்டியை காட்டிவருகிறது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வு வழங்கி இந்த நாட்டின் இன ஐக்கியத்தை மேம்படுத்தும் நோக்கம் ஏதுவும் இல்லாமல் நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளும் தலைவிதியை யார் தான் மாற்றப்போகின்றார்கள்.

1948 ல் பிரித்தானியர் இந்த நாட்டை விட்டு அகன்ற பின்னர், நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் மாநாடுகள் ஏராளம் ஒப்பந்தங்கள் பல காலத்துக்கு காலம் இவை புதிய புதிய வடிவங்களில் முன்னெடுக்கப்பட்டாலும் நிலைமை அப்படியேதான் உள்ளது.

1957ல் பண்டா செல்வா ஒப்பந்தம் 1964 சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் 1965 டட்லி செல்வா ஒப்பந்தம் 1985 திம்பு பேச்சு வார்த்தை 1987 இந்திய இலங்கை உடன் படிக்கை 2002ல் ரணில் பிரபாகரன் ஒப்பந்தம் என பட்டியல் நீண்டதாகும் மேற்படி ஒப்பந்தங்கள் யாவும் தோல்வியில் போனமைக்கான ஆய்வுகளோ, ஆக்கபூர்வமான செயற்பாடுகளோ, எதுவும் நடத்தப்படாமல் நாட்டையும் மக்களையும் சொந்த அரசியல் நலன்களுக்காக ஏமாற்றுகின்ற படலம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

கொழும்பில் யுத்த வெற்றி விழா நடைபெற்று கொண்டு இருக்கும் போது கிழக்கில் பல்கலைக்கழக மாணவர் இடையே முறுகல் நிலை மேம்பட்டு இருந்ததை காணக்கூடியதாக இருந்தது. இந்திய திரைப்பட விழா பகிஸ்கரிப்பு ஜி. எஸ்பி சலுகை நிறுத்தம் பாங்கிமூன் நியமித்துள்ள விசாரணை குழு இவை யாவும் எதிர்கால இலங்கையை புடம்போட்டு காட்டுகின்றது. சிங்கள அரசின் புறக்கணிப்புக்களை பொறுக்க முடியாமலே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர் என்பதை எத்தனை அரசியல் வாதிகள் ஏற்கின்றனர் இந்த யதார்த்தம் உணரப்படாத நிலையில் இந்த நாட்டில் எப்படி அமைதி தோன்றும். யுத்தத்தின் கொடுமையால் எவ்வளவு பேர் மடிந்தனர் இழக்கப்பட்ட சொத்துக்கள் அழிக்கப்பட்ட கல்வி நிலையங்கள் நிர்மூலமாக்கப்பட்ட வழிபாட்டுத்தலங்கள் இவை பற்றி எதுவும் கூறப்படாமல், ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படாமல் முழு பூசனிக்காயை சோற்றில் மறைக்கும் முயற்சியே மேற்கொள்ளப்படுகிறத பாரிய அபிவிருத்தி என்ற பெரிய போர்வை சகல அநியாயங்களையும் மூடி மறைக்கிறது இறுதி யுத்தத்தில் தாம் குற்றம் செய்யவில்லை என மகிந்த அரசாங்கம் அடித்துக் கூறுகின்றது. அப்படியாயின் ஏன் அதற்கு விசாரனைக்கமிசனை மகிந்த அரசாங்கம் நிறுவியது பிழை செய்யவில்லை என்றால் கமிசன் தேவையில்லையே? அரசாங்கத்தின் செயற்பாடு வினோதமாக உள்ளது.

எதிர்க்கருத்தாளர்கள் முன்னர் வெள்ளைவான் கொண்டே கடத்தப்பட்டனர் தற்போது இது பரினாமம் அடைந்த கறுப்பு வானிலும் கடத்தும் நிலையும் தோன்றியுள்ளது.

இன்றுவரை தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வைக்காண இயலாத நிலையே தென் இலங்கை அரசியல் களத்தில் உள்ளது. இந்த நிலையில் நாட்டின் இன ஐக்கியத்தை சமூக ஒற்றுமையை எப்படி எதிர்பார்க்க முடியும்.